UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - OCTOBER 2019
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2019 ஒக்டோபர்

# TAMIL - II / தமிழ் - II (TG - II)

## குறிப்பிட்ட பாட நூல்கள்

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

**முதலாம்** பகுதியிலுள்ள வினாவுக்கும் **இரண்டாம்** பகுதியிலுள்ள

எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

## பகுதி I

01. மேல்வரும் பாடல்களின் சிறப்பினை விளக்குக.

(அ) வான் கடற் பரப்பில் தூவற்கு எதிரிய,
மீன் கண்டன்ன மெல் அரும்பு ஊழ்த்த,
முடவு முதிர் புன்னைத் தடவு நிலை மாச் சினை,
புள் இறை கூரும் மெல்லம் புலம்ப!-
நெய்தல் உண்கண் பைதல கலுழ,
பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்
அரிது உற்றனையால் பெரும! உரிதினின் உற்றனையால்
கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும் - கொண்டலொடு
குருஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந் திமில் கொன்ற புது வலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி,
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே. ம.ப.பா.

(ஆ)

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது
இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,
ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்
கடந்துஅடு தானைச் சேர லாதனை

யாங்கனம் ஒத்தியோ! வீங்குசெலல் மண்டிலம்
பொழுது என வரைதி, புறங்கொடுத்து இறத்தி;
மாறிவருதி; மலை மறைந்து ஒளித்தி;
அகல்இரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால், பல்கதிர் விரித்தே!

## பகுதி II

02. தலைவன் பிரிவை ஆற்றமாட்டாத தோழியின் அன்பின் ஆழமும், அவளைத் தோழி ஆற்றுப்படுத்துவதும் அக நானூற்றுப் பாடல்களில் வெளிப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

03. "தமிழ்ச் சூழலில் அரசுகளின் உருவாக்கமும், அரசர்களின் வீரமும் புற நானூற்றுப் பாடல் வழி அறிய முடியும்." - இக்கூற்றைப் பரிசீலனை செய்க.

04. ஆண்டாளின் பக்திமை அவரது பாசுரங்களின் மூலமாக வெளிப்படுமாற்றை விபரிக்குக.

05. சேக்கிழார் கண்ணப்ப நாயனார் புராணத்தில் வேட்டுவச் சேரியையும், வேடர்களது பழக்க வழக்கங்களையும் சித்திரிக்குமாற்றை விளக்குக.

06. திருக்குறள் அக்கால அரசுகளின் நடவடிக்கைகளுக்கு விதிமுறைகள் செய்தவாற்றை விபரிக்குக.

ம.ப.பா.

07. பாரதியாரின் சுயசரிதை அவரது வாழ்வின் சில சம்பவங்களையே கோடிட்டுக் காட்டுகிறது: அலசுக.

**அல்லது**

பாரதியாரது நாட்டுப்புறப் பண்பாட்டின் மீதான காதல் குயிற்பாட்டில் வெளிப்படுமாற்றைத் துலக்குக.

08. 'இலங்கையர்கோனின் சிறுகதைகளில் யாழ்ப்பாணச் சமூகம்' எனும் பொருள் பற்றிக் கட்டுரைக்குக.